செ.வெ.எண். 07/ஜுன் தேதி : 03.06.2016

# பத்திரிக்கை செய்தி

தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் காலியாக உள்ள இரவுக்காவலர் பணிக்காலியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பணிகாலியிடத்திற்கான கல்வித்தகுதி தமிழில் எழுத படிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும். இப்பணியிடத்திற்கு பொது பிரிவு முன்னுரிமை அற்றவர்கள் (OC – General Non-Priority) விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு 01.01.2016 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். SC/SCA/ST – 35 வயதிற்குள்ளும், MBC/BC/BCM -32 வயதிற்குள்ளும், OC - 30 வயதிற்குள்ளும், இருத்தல் வேண்டும். மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்ட தகுதியான நபர்கள் தங்களது வேலைவாய்ப்பு அடையாள அட்டை, கல்வித்தகுதி சான்றிதழ், சாதி சான்றிதழ், குடும்ப அட்டை நகலுடன் 20.06.2016 மாலை 5.00 மணிக்குள் **தருமபுரி** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு **நேரடியாக** விண்ணப்பிக்குமாறு **தர்மபுரி** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் (பொறுப்பு) **திரு.செ.பாஸ்கரன்** அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.